தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

**விதைப் பரிசோதனை: விவசாயிகளுக்கு வேண்டுகோள்**

**காஞ்சிபுரம்:** காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் விதைப் பரிசோதனை செய்து கொண்டு நடவுப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இது குறித்து காஞ்சிபுரம் விதைப் பரிசோதனை அலுவலர் சி. பெருமாள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தற்போது பரவலாக பெய்து வரும் மழையைப் பயன்படுத்தி, விவசாயிகள் நெல் பயிர் நேரடி விதைப்பு, வெண்டைக்காய் உள்ளிட்ட காய்கறிப் பயிர்கள், ஆடிப் பட்டத்தில் பயறு வகை பயிர்களாகிய உளுந்து, பச்சைப் பயறு, காராமணி ஆகியவற்றை சாகுபடி செய்ய தயாராகுவீர்.

விவசாயிகள் தங்களிடம் உள்ள நெல், பயறு, காய்கறி விதைகளில் நல்ல முளைப்புத் திறன் உள்ளதா? எனப் பரிசோதித்து விதைப்பை மேற்கொள்ள வேண்டும். நல்ல முளைப்புத் திறன் உள்ள விதைகளே, தேவையான பயிர் எண்ணிக்கைக்கு வழிவகுக்கும்.

ஒரு பயிருக்கான, குறிப்பிட்ட பயிர் எண்ணிக்கை வயலில் பராமரிப்பதன் மூலமே அதிக மகசூலைப் பெற முடியும்.

விதைப் பரிசோதனை செய்து விதைப்பதனால் அதிக மகசூலையும் பெற முடியும், விதைக்கான செலவையும் குறைக்க முடியும்.

எனவே விவசாயிகள் தங்களிடம் உள்ள விதையைப் பயன்படுத்துவதற்கு முன்பாக அதிலிருந்து 100 கிராம் அளவுள்ள விதையை எடுத்து விதைப் பரிசோதனை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், காஞ்சிபுரம் என்ற முகவரிக்கு, பரிசோதனைக் கட்டணம் ரூ.30-உடன், நேரிலோ அல்லது தபால் மூலமோ

அனுப்பி பரிசோதனை முடிவுகளை பெற்றப் பின் விதைப்பு மேற்கொண்டு பயனடையலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர்களுக்கு பயிற்சி</u>**

திருவள்ளூர் மாவட்டப் பள்ளிகளில் உள்ள சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர்களுக்கு ஒரு நாள் பயிற்சி முகாம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமில் மாவட்ட சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் வே.குணசேகரன் தலைமை வகித்தார். மாவட்ட கல்வி அலுவலர் நேரு வரவேற்றார்.

மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர் அறிவழகன், பள்ளிகளின் துணை ஆய்வாளர் ராமமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் சந்திரசேகர் பங்கேற்று, சுற்றுச்சூழல் மன்றத்தின் குறிக்கோள், செயல்பாடுகள், பதிவேடுகள் பராமரிப்பு உள்ளிட்டவை குறித்து விளக்கிப் பேசினார்.

ஆரணி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி முதுநிலை ஆசிரியர் முருகவேலு நன்றி கூறினார்.

**<u>மழை இல்லாததால் ஆடிப்பட்ட விதைப்பு பின்னடைவு</u>**

**நத்தம்:** நத்தம் பகுதியில் மழை இல்லாததால் ஆடிப்பட்ட விதைப்பு பணியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

நத்தம் பகுதியில் சுமார் 5ஆயிரம் ஏக்கர்களுக்கு மேல் மானாவாரி நிலங்கள் உள்ளன. இதில் ஆண்டுதோறும் ஆடிப்பட்ட விதைப்புகள் நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை உரிய காலத்தில் பெய்யாததால் நிலங்கள் ஈரப்பதம் இன்றி வறண்டு காணப்படுகின்றன.

இதனால் நிலக்கடலை, கம்பு, சோளம், குதிரைவாலி, திணை, மொச்சை மற்றும் பயிறு வகைகள் விதைக்கும் பணியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் பருவ மழையை எதிர்பார்த்து காத்திருப்பதாக கவலையுடன் தெரிவித்தனர்.

## விலையில்லா ஆடு திட்டம்: பயனாளிகள் தேர்வில் முறைகேடு புகார்

**திண்டுக்கல்:** விலையில்லா ஆடு வழங்கும் திட்டத்தில், பயனாளிகளை தேர்வு செய்வதில் முறைகேடு நடந்துள்ளதாக கிராம மக்கள் புகார் அளித்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம் அய்யம்பாளையம் பகுதியைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட பெண்கள், சீட்டு பண மோசடி குறித்து மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளிக்க வந்தனர். இதுதொடர்பாக அவர்கள் தெரிவித்தது:

அய்யம்பாளையம் கணேசபுரத்தில், பெண் ஒருவர் சிறுசேமிப்புத் திட்டம் என்ற பெயரில் சீட்டு நடத்தி வந்தார். கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக முதலீடு செய்த பணத்தை வட்டியுடன் திருப்பி வழங்கியதால், அவர் மீது நம்பிக்கை ஏற்பட்டு பலரும் முதலீடு செய்யத் தொடங்கினார்.

இந்த நிலையில், கடந்த 2 ஆண்டுகளாக பணத்தை திருப்பித் தராமல் மோசடி செய்து வருகிறார். மேலும் பொதுமக்களின் பணத்தில், அய்யம்பாளையம் பகுதியில் அதிகமான நிலங்களை வாங்கிய அவர், தற்போது தலைமறைவாகிவிட்டார். இதுகுறித்து உரிய விசாரணை நடத்தி, முதலீடு செய்தவர்களின் பணத்தை மீட்டு தருவதற்கு மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தனர்.

கருப்புக் கொடியுடன் உண்ணாவிரதம்: திண்டுக்கல் மாவட்டம், செம்பட்டி அடுத்துள்ள எஸ்.பாறைப்பட்டியைச் சேர்ந்தவர் பி.ராஜேந்திரன். தனது நிலத்தை அரசியல்வாதிகள் அபகரித்துவிட்டதாக கூறி, கருப்புக்கொடியுடன் ஆட்சியர்

அலுவலகத்தில் உண்ணாவிரதம் இருக்க முயன்றார். அங்கு விரைந்து சென்ற போலீஸார், அவரை எச்சரித்து அனுப்பி வைத்தனர்.

விலையில்லா ஆடு வழங்க கோரிக்கை: திண்டுக்கல் அடுத்துள்ள பள்ளப்பட்டி ஊராட்சிக்குள்ளபட்ட வடக்கு பாறைப்பட்டியைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட பெண்கள் விலையில்லா ஆடு வழங்க கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்க வந்தனர்.

இதுதொடர்பாக அவர்கள் கூறும்போது, தங்கள் பகுதியைச் சேர்ந்த அரசு ஊழியர்களை, ஆடு வழங்குவோருக்கான பயனாளிகள் பட்டியலில் இணைத்துள்ளனர். அதனால் ஏழை எளியோர், பயன்பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அரசின் விலையில்லா ஆடு வழங்கும் திட்டத்தில் பயனாளிகளை தேர்வு செய்வதில் நடந்துள்ள முறைகேடுகள் குறித்து, மாவட்ட நிர்வாகம் விசாரணை நடத்த வேண்டும் என தெரிவித்தனர்.

## ஆண்டிபட்டி பகுதியில் பருவ மழை தாமதம்: கருகும் பயிர்கள்

**ஆண்டிபட்டி:** ஆண்டிபட்டி பகுதியில் தென்மேற்கு பருவமழை பெய்வதில் தாமதம் ஏற்பட்டு, பயிர்கள் கருகி வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

ஆண்டிபட்டி வட்டாரத்தில் தெப்பம்பட்டி, மொட்டனூத்து, ஆசாரிபட்டி, கண்டமனூர் மற்றும் புள்ளிமான் கோம்பை பகுதிகளில் முருங்கை, மல்லிகை, சம்பங்கி பூ, அவரைக்காய், வெண்டிக்காய், மிளகாய், கத்திரிக்காய் போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால், கிணற்று நீரை வைத்து விவசாயம் செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில் இப்பகுதியில் கடும் வறட்சி நிலவி வருவதால், நிலத்தடி நீர் மட்டமும் குறைந்து, கிணறுகள் வற்றிவிட்டன. இதனால் கிணற்று நீரை நம்பி பயிரிட்ட நிலங்களில் விவசாயம் கேள்விக்குறியாக உள்ளது.

இந்நிலையில் கடந்த மாதம் பெய்த மழையை நம்பி இப்பகுதி விவசாயிகள் பருத்தி, வெண்டைக்காய், கத்திரிக்காய் ஆகிய பயிர்களை பயிரிட்டனர். ஆனால் போதிய மழை இல்லாததால் தண்ணீரின்றி பயிர்கள் வறண்டு வருகின்றன.
ஆயிரக்கணக்கில் செலவு செய்து பயிரிட்ட விவசாயிகள் தற்போது நஷ்டத்தை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து விவசாய சங்கத்தைச் சேர்ந்த பால்பாண்டி கூறியது:

மனைவியின் நகையை வங்கியில் அடகு வைத்து விவசாயம் செய்துள்ளோம். தற்போது மழை இல்லாததால் பயிர்கள் கருகி வருகின்றன. இதனால் பல ஆயிரக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றார்.

**ஆரணியில் பட்டு பூங்கா அமைக்க வேண்டும்**

**ஆரணி:**

ஆரணியில் பட்டுப் பூங்காவை அமைக்க வேண்டும் என்று ஆரணி மக்களவைத் தொகுதி உறுப்பினர் செஞ்சி வே.ஏழுமலை வலியுறுத்தினார்.

இதுதொடர்பாக மக்களவையில் அவர் பேசியதாவது:

ஆரணி பட்டு நகரத்தில் பல ஆண்டுகளாக பட்டுப் பூங்கா அமைக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இக்கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணி வழியாக செல்லக் கூடிய திண்டிவனம்-நகரி ரயில் பாதைத் திட்டத்துக்கு இந்த ஆண்டு ரூ.10 கோடி ஒதுக்கியுள்ளதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திண்டிவனத்திலிரந்து செஞ்சி வழியாக திருவண்ணாமலைக்கு ரயில் பாதை தேவை என்பதை இங்கு கோரிக்கையாக வைக்கிறேன்.

செஞ்சிக்கோட்டை வரலாற்று சிறப்பு மிக்கதாகும். ஆகையால் செஞ்சிக்கோட்டையை சுற்றுலாத்தலமாக அறிவிக்க வேண்டும் என்றார் ஏழுமலை.

## <u>அக்கரைப்பட்டியில் ரூ.30 லட்சத்துக்குபருத்தி ஏலம்</u>

**ராசிபுரம்:**ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு உள்பட்ட அக்கரைப்பட்டி ஏல மையத்தில் திங்கள்கிழமை ரூ.30 லட்சம் பருத்தி ஏலம் போனது.

60 கிலோ கொண்ட 1,192 சுரபி ரகப் பருத்தி மூட்டைகள் ஏலத்திற்கு வந்தன. குறைந்தபட்சமாக ரூ. 7,001 முதல் அதிக பட்சமாக ரூ.7,658-க்கு குவிண்டால் ஒன்றுக்கு விற்பனையானது.

## <u>காவிரியில் தண்ணீர் திறக்கக் கோரிக்கை</u>

**பரமத்திவேலூர்:**பரமத்திவேலூர் காவிரியாற்றில் ஆடி 18 பண்டிகைக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

நாமக்கல் மாவட்ட பொதுமக்கள் ஒவ்வொரு ஆண்டும் பரமத்திவேலூரில் ஆடி 18 பண்டிக்கையின் போது நடைபெறும் பரிசல் போட்டி, மோட்ச தீபம், கோயில் ஆயுதங்களை சுத்தம் செய்து தலையில் தேங்காய் உடைக்கும் நிகழ்ச்சிக்காக வந்து செல்வது வழக்கம். மேலும், புதுமணத் தம்பதியினர் காவிரியில் நீராடி, பூஜைகள் செய்து காவிரி தாயை வணங்கி மஞ்சள் கயிறு கட்டுக் கொள்வர்.

நாமக்கல் மாவட்டத்தில் குலதெய்வக் கோயில்களில் பாரம்பரியமாக வைத்துள்ள கத்தி, அரிவாள், கம்பு, வேல் உள்ளிட்ட ஆயுதங்களை பரமத்திவேலூர், மோகனூர் காவிரியாற்றில் சுத்தம் செய்வர். பின்னர், அந்த ஆயுதங்களுக்கு பூஜைகள் செய்து வழிபடுவர்.

மேலும் சிலர் பூஜையின் போது தலையில் தேங்காய் உடைத்து வழிபாடு நடத்துவர். ஆடி 18 பண்டிகையை முன்னிட்டு முதல் நாள் இரவில் இருந்து பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் இருந்தும் பொதுமக்கள், புதுமணத் தம்பதியினர் உள்ளிட்டோர் காவிரியில் புனித நீராடி பல்வேறு பூஜைகள் செய்வது வழக்கம்.

இந்த நிலையில், தற்பொழுது காவிரியில் குறைந்த தண்ணீரே உள்ளது. ஆடி 18 வரை இந்த நிலை நீடித்தால் பரிசல் போட்டியும், மோட்ச தீபத்தையும் விட முடியாமல் போய்விடும் நிலை உள்ளது. எனவே, ஆடி 18 பண்டிகையின் போது காவிரியில் கூடுதலாக தண்ணீர் திறந்து விட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

**பால் கொள்முதல் விலை உயர்வை அறிவிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்**

**கிருஷ்ணகிரி:** நடைபெற்றுக்கொண்டிருக்கும் தமிழக சட்டப் பேரவைக் கூட்டத் தொடரிலேயே பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி, கிருஷ்ணகிரியில் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கிருஷ்ணகிரியில் உள்ள தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் அருகே தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் எஸ்.ஏ.சின்னசாமி தலைமையில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாநில துணைத் தலைவர் கே.எஸ்.ஆறுமுகம், தருமபுரி மாவட்டத் தலைவர் பி.ஆர்.செங்கோடன், செயலாளர்கள் கே.சக்திவேல், கே.குப்புசாமி, பொருளாளர் உ.பழனி, கிருஷ்ணகிரி மாவட்டத் தலைவர் பி.ஸ்ரீராமரெட்டி, செயலாளர் எ.சென்னையநாயுடு, பொருளாளர் கே.ராஜரத்தினம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கால்நடைகளின் விலை உயர்வு, தீவன விலை உயர்வு, வறட்சி, பராமரிப்புச் செலவு உயர்வு என பால் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ள நிலையில், பாதிக்கப்பட்ட பால் உற்பத்தியாளர்களுக்கு, இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்திலேயே பால் கொள்முதல் விலையை பசும்பால் லிட்டருக்கு ரூ.30-ம், எருமைப்பால் லிட்டருக்கு ரூ.40 என உயர்த்தி வழங்கும் அறிவிப்பை வெளியிட வேண்டும்.

பாலின் தரத்தை அளவிடும் முறையை ஐ.எஸ்.ஐ. முறையில் அளவிட வேண்டும்.

பால் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் கர்நாடகம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களைப் போல பால் உற்பத்தி மானியம் லிட்டருக்கு ரூ.4 வழங்க வேண்டும்.

கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் நீண்டகாலமாகத் தொகுப்பூதியத்தில் பணியாற்றும் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

அண்ணா நூற்றாண்டு காப்பீட்டுத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்த வேண்டும். அனைத்து கால்நடைகளுக்கும் இலவசத் தீவனம், இலவசக் காப்பீடு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோர் முழக்கங்களை எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

**மிளகு விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**

**ஏற்காடு:**சேலம் மாவட்டம், ஏற்காடு சேர்வராயன் மலைப் பகுதியில் விளைவிக்கப்படும் மிளகுக்கு நிகழாண்டில் நல்ல விலைக் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஏற்காடு விவசாயிகள் காபி தோட்டங்களில் ஊடுபயிராக மிளகு, ஆரஞ்சு, சில்வர் ஒக் மரங்களைச் சாகுபடி செய்து வருகின்றனர். சில்வர் ஒக் மரங்களின் அருகே மிளகு செடியை நடுகின்றனர்.

இதனால், மிளகு செடிகள் சில்வர் ஓக் மரங்களின் மீது படர்ந்து வளருகிறது. கடந்த ஆண்டு மிளகு கிலோ ரூ.350-க்கு விற்பனை செய்யப்பட்டது.

நிகழாண்டில் கிலோ ரூ.750-க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஏற்காட்டில் விளையும் மிளகுகளை கேரள மாநில மொத்த வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். மேலும், கேரள வியாபாரிகள், காபித் தோட்டங்களில் மிளகுச் கொடிகளைக் குத்தகைக்கு எடுத்தும், மிளகை விளைவித்து வாங்கிச் செல்கின்றனர்.

உலகில் வியத்நாமில் அதிக அளவு மிளகு விளைகிறது. இந்தியாவில் மிளகுக்கான தேவை தற்போது அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் உற்பத்திக் குறைவாக

உள்ளதால், மிளகு விலை உயர்ந்துள்ளது என்று, கொச்சியைச் சேர்ந்த மிளகு விலை நிர்ணய வர்த்தக சங்கத்தினர் தெரிவித்தனர்.

இதுகுறித்து காபி விவசாயி மகேஷ்வரிகுமார் கூறியது:

காபிக்கான விலைக் குறைந்துள்ள நிலையில், தற்போது மிளகு விலை உயர்ந்துள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது என்றார் அவர்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 23 ஆயிரம் கன அடியாக அதிகரிப்பு**

**மேட்டூர்:**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து திங்கள்கிழமை நொடிக்கு 23 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது.

கர்நாடக மாநிலத்தில் பெய்து வரும் பலத்த மழையால் அங்குள்ள கபினி அணை நிரம்பியது. கிருஷ்ணராஜசாகர் அணை நிரம்பும் தறுவாயில் உள்ளது. இதனால், இந்த இரு அணைகளின் பாதுகாப்பு கருதி அணைக்கு வரும் உபரி நீர், காவிரி ஆற்றில் திறந்துவிடப்படுகிறது.

இதனால், கடந்த 18-ஆம் தேதி முதல் மேட்டூர் அணைக்கு உபரிநீர் வந்து கொண்டிருக்கிறது. வெள்ளிக்கிழமை காலை நொடிக்கு 4,354 கன அடியாக இருந்த அணையின் நீர்வரத்து படிப்படியாக அதிகரித்தது. இந்த நிலையில், திங்கள்கிழமை காலை அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 23,276 கன அடியாக அதிகரித்தது.

நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால், அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை 55.89 அடியாக உயர்ந்தது.

கடந்த மூன்று நாள்களில் அணையின் நீர்மட்டம் 7.95 அடி உயர்ந்தது. திங்கள்கிழமை காலை மேட்டூர் அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 800 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 21.72 டி.எம்.சி.யாக இருந்தது. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வந்தால், அணையின் நீர்மட்டம் விரைவில் 100 அடியை எட்டும் வாய்ப்பு உள்ளது என்று கூறப்படுகிறது.

நீர்மட்டம் உயர்ந்து வருவதால், உபரி நீர் போக்கியின் மதகுகளில் பராமரிப்புப் பணி நடைபெறுகிறது.

ஒகேனக்கல்லில் தொடரும் தடை: ஒகேனக்கல்லில் கடந்த 18-ஆம் தேதி நீர்வரத்து நொடிக்கு 22 ஆயிரம் கன அடியாக இருந்தது. இது ஞாயிற்றுக்கிழமை 19 ஆயிரம் கன அடியானது. இந்த நிலையில், திங்கள்கிழமை மாலை 6 மணி நிலவரப்படி நீர்வரத்து 12 ஆயிரம் கன அடியாகக் குறைந்தது.

இருப்பினும், கர்நாடகத்தின் கபினி அணையிலிருந்து அதிகளவில் தண்ணீர் திறந்து விடப்படுவதால், ஒகேனக்கல்லில் நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால், ஒகேனக்கல் அருவிகளில் சுற்றுலாப் பயணிகள் குளிக்கவும், பரிசல் ஓட்டவும் விதிக்கப்பட்ட தடை தொடர்ந்து 4-ஆவது நாளாக திங்கள்கிழமையும் நீட்டிக்கப்பட்டது.

## "அன்றாட உணவில் சிறுதானியங்களை சேர்த்துக் கொள்ள வேண்டும்'

**புதுக்கோட்டை:**மக்கள் அன்றாட உணவில் சிறுதானியங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றார் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சி. விஜயபாஸ்கர்.

புதுக்கோட்டையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் ஆட்சியர் செ. மனோகரன் தலைமையில் நடைபெற்ற பாரம்பரிய உணவுத் திருவிழாவை தொடக்கி வைத்தும், சிறுதானிய உணவு வகைகள் செயல்முறை விளக்க கையேட்டை வெளியிட்டும் அவர் பேசியது:

பொதுமக்கள் நோயற்ற நலவாழ்வு வாழ சிறுதானியங்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், தமிழகம் முழுவதும் உணவுத் திருவிழாவை நடத்த முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

அதனடிப்படையில், மாவட்டத்தில் ஜூலை 20 முதல் 26-ம் தேதி வரை 7 நாள்கள் பாரம்பரிய உணவுத் திருவிழா நடைபெறுகிறது.

தினமும் பிற்பகல் 3 மணி முதல் இரவு 7 மணி வரை நடைபெறும்.

இந்த பாரம்பரிய உணவுத் திருவிழாவில் உடல் நலனுக்கு நன்மை பயக்கும் சிறுதானியங்கள் குளித்த செயல்விளக்கம், சமையல் முறைகள் பொதுமக்களுக்கு செய்து காண்பிக்கப்படும்.

பாரம்பரிய உணவுகள் குறித்த முக்கியத்துவத்தை விளக்கும் வகையில் தினமும் கருத்தரங்கம், கலைநிகழ்ச்சிகள், நாடகங்கள் நடைபெறுகின்றன.

அன்றாட உணவில் உடல் நலத்துக்கு நன்மை பயக்கும் சிறுதானியங்களான தினை, சாமை, குதிரைவாலி, சோளம், கம்பு ஆகியவற்றை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

முன்னதாக, செய்தி மக்கள் தொடர்புத் துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம், உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை, வேளாண்மைத் துறை, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை, புதுவாழ்வுத் திட்டம், சமூகநலத்துறை ஆகிய துறைகளின் கீழ் அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்கை அமைச்சர் உள்ளிட்டோர் பார்வையிட்டனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

**<u>நீடாமங்கலம் வேளாண் மையத்தில் ஆடு வளர்ப்பு ஒருநாள் பயிற்சி</u>**

**நீடாமங்கலம் :** திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் முனைவர் சோழன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நாளை (22ம்தேதி) காலை 10 மணிக்கு பரண்மேல் ஆடு வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி நடைபெற உள்ளது.

பயிற்சியில் ஆடு வளர்ப்பு,நோய் மேலாண்மை, தீவனப்புல் வளர்த்தல் குறித்து தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெற விருப்பமுள்ளவர்கள் 04367-260666 அல்லது 261444 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டோ அல்லது நேரிலோ தங்கள் பெயரை முன் பதிவு செய்து கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார்.

## விவசாய தொழில்நுட்ப செயல்விளக்க கூட்டம்

**நத்தம் :** நத்தம் வட்டார அட்மா திட்டம் சார்பில் 22 விவசாய ஆலோசனை குழு உறுப்பினர்கள், 13 உழவர் நண்பர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களுக்கான விவசாய தொழில்நுட்பம் குறித்த செயல்விளக்க கூட்டம் நடந்தது.

வேளாண் உதவி இயக்குநர் ரவிபாரதி தலைமை வகித்தார். மாவட்ட  வேளாண் துணை இயக்குநர் (அட்மா) பாஸ்கரன் பேசுகையில், உழவர் நண்பர்கள் வேளாண் துறை அலுவலர்களை சந்தித்து திட்டங்களை பெற்று பயடைய வேண்டும் என்றார்.

வேளாண் உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) ரவிச்சந்திரன், அட்மா திட்டத்தில் உறுப்பினர்கள் மற்றும் உழவர் நண்பர்கள் பங்களிப்பு பற்றி விளக்கினார்.

தோட்டக்கலை உதவி இயக்குநர் சசிகலா, சூரிய மின்சக்தி மோட்டார் அமைப்பது பற்றியும், வணிகத்துறை வேளாண் உதவி அலுவலர் மாசிலாமணி வணிக திட்டங்கள் குறித்தும், துணை வேளாண் அலுவலர் எலிசபெத் ராணி துவரை நாற்று நடவில் நுண்ணீர் பாசனம் குறித்தும் விளக்கினர்.  துவரை நாற்று நடவு மற்றும் சிறுதானிய செயல்விளக்கம் அமைக்க விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கப்பட்டன.

**<u>பழநி பகுதியில் சுழற்றி அடிக்குது சூறாவளி உதிர்கிறது மா பிஞ்சுகள் விவசாயிகள் கவலை</u>**

**பழநி :** பழநி பகுதியில் சூறாவளி காற்றுக்கு மா பிஞ்சுகள் உதிர்வதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

பழநி பகுதியில் 80க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்கள் விவசாயத்தை அடிப்படையாக கொண்டவை. இக்கிராமங்களில் நெல், கரும்பு போன்ற பயிர் விவசாயம் மட்டுமின்றி காய்கறி மற்றும் பழவகைகயை சேர்ந்த தோட்டக்கலை விவசாயமும் அதிகளவில் நடந்து வருகிறது. பழநி ஆருகே ஆயக்குடி பகுதியில் அதிகளவு மா, கொய்யா மற்றும் சப் போட்டா விவசாயம் அதிகளவு நடந்து வருகிறது.

பழநி பகுதியில் சுமார் 3 ஆயிரம் ஹெக்டேரில் மா விவசாயம் நடந்து வருகிறது. இங்கு கல்லாமை, நீலம், பங்கனவள்ளி, மல்கோவா, காளாபாடி, ஆபோஸ் வகை மாங்காய்கள் அதிகளவில் விளைவிக்கப்படுகின்றன. மே-ஜுன் மாதங்களும், டிசம்பர்-ஜனவரி மாதங்களும் சீசன் காலங் களாகும். தற்போது சீசன் முடியும் தருவாயில் உள்ள நிலையில் பழநி பகுதியில் கடந்த சில நாட்களாக வீசும் சூறை காற்றுக்கு மா மரங்களில் இருந்து பிஞ்சு கள் உதிர்ந்து வருகின்றன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து ஆயக்குடியை சேர்ந்த மா விவ சாயி மன்சூர் கூறுகையில், தற்போது வீசும் சூறை காற்றுக்கு நாள் ஒன்றுக்கு 10 முதல் 15 கிலோ வரை மா பிஞ்சுகள் உதிர்கின்றன. இதனால் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றார்.

மா பிஞ்சுகள் உதிர்ந்து வரத்து குறைந்து வருவதால் விலை அதிகரித்துள்ளது. சில தினங்களுக்கு முன் கிலோ ரூ30க்கு விற்பனை யான கல்லாமை தற்போது ரூ.40க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதுபோன்று கிலோ ரூ.40க்கு விற்பனையான செந்தூரா ரூ.60க்கும், கிலோ ரூ.35க்கு விற்பனை யான பங்கனவள்ளி ரூ.50க்கும், கிலோ ரூ.40க்கு விற்பனையான கிரேப் ரூ.60க்கும், கிலோ ரூ.70க்கு விற்பனையான ஆபேஸ் ரூ.120க்கும் விற்பனையாகிறது.

இப்பகுதியில் பழங்களை பதப்படுத்தும் குளிர்பதன கிட்டங்கி மற்றும் ஜூஸ் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## <u>கண்ணாமூச்சி காட்டுது மழை வேகமாக சரியுது நீர்மட்டம் விவசாயம் பாதிக்கும் அபாயம்</u>

**பழநி :** போதிய மழை பெய்யாததால் அணைகளின் நீர்மட்டம் குறைந்து வருவதால் பழநி பகுதியில் விவசாயம் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பழநி பகுதியில் 80க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்கள் விவசாயத்தை அடிப்படை யாக கொண்டவை. இக்கிராமங்களின் விவசாயம் இப்பகுதிகளில் உள்ள அணைகளை நம்பியும், அணைகளிலிருந்து நீர்ப்பாசனம் பெறும் கண்மாய்களை நம்பியுமே இருந்து வருகிறது. இந்த வருடம் போதிய அளவு மழை பெய்யவில்லை.

தற்போது தென்மேற்கு பருவமழை கண்ணாமூச்சி காட்டுவதால் அணைகளின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது. இதன்படி 65 அடியாக உள்ள பாலாறு-பொருந்தலாறு அணையின் நீர்மட்டம் 29.76 அடியாக உள்ளது. அணையிலிருந்து வினாடிக்கு 7 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. 67 அடி உயரம் உள்ள வரதமாநதியின் நீர்மட்டம் 52.76 அடியாக உள்ளது. அணையிலிருந்து வினாடிக்கு 20 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.

80 அடி உயரம் உள்ள குதிரையாறு அணை நீர்மட்டம் 34.42 அடியாக உள்ளது. அணையிலிருந்து வினாடிக்கு 50 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. இந்த அணைகளில் பாதி அளவு சகதி இருக்கும் நிலையில் எஞ்சியிருக்கும் நீரை கொண்டு தற்போது பழநி குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய இயலாத சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் பழநி நகருக்கு குடிநீர் பஞ்சம் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. மழை பெய்யாவிட்டால் விவசாயமும் பாதிக்கும் அபாயம் உள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

<u>**பவானி காலிங்கராயன் தடுப்பணையில் பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு**</u>

பவானி காலிங்கராயன் தடுப்பணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

தண்ணீர் திறப்பு

பவானி அருகே உள்ள காலிங்கராயன் அணையில் இருந்து 15 ஆயிரத்து 743 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. இந்த அணையில் திறந்து விடப்படும் தண்ணீர் கடை மடை விவசாய நிலங்களுக்கு வருவதில்லை என்று பாசன விவசாயிகள் சங்கம் சார்பில் அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து காலிங்கராயன் வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி ரூ.91 கோடி மதிப்பில் நடைபெற்று வந்தன.

பணிகள் முடிவடைந்த நிலையில் நேற்று காலிங்கராயன் தடுப்பணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார். அதைத்தொடர்ந்து நேற்று முதல் காலிங்கராயன் அணையில் இருந்து முதல் போக பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டது. கலெக்டர் சண்முகம், முன்னாள் அமைச்சர் கே.வி.ராமலிங்கம் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்துகொண்டு அணையின்

மதகுகளை திறந்தனர். பின்னர் அணையில் சீறிப்பாய்ந்த தண்ணீரை அனைவரும் மலர்கள் தூவி வரவேற்றனர்.

650 கனஅடியாக அதிகரிக்கப்படுகிறது

இந்த தண்ணீர் முதலில் வினாடிக்கு 250 கனஅடியாக திறக்கப்பட்டது. படிப்படியாக 650 கனஅடியாக அதிகரிக்கப்படுகிறது. பவானிசாகர் அணையின் நீர்மட்டத்தை கருத்தில் கொண்டு நேற்று முதல் டிசம்பர் மாதம் 20-ந்தேதி வரை 3 மாதத்துக்கு விவசாயத்துக்கு தொடர்ந்து தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதில் மேயர் மல்லிகா பரமசிவம், துணை மேயர் கே.சி.பழனிசாமி, மண்டல தலைவர்கள் கேசவமூர்த்தி, மனோகரன், பவானி ஒன்றியக்குழு தலைவர் கண்ணம்மாள் முத்துச்சாமி, ஆவின் துணைத்தலைவர் சுப்பிரமணியம், எலவமலை கூட்டுறவு வங்கி தலைவர் எஸ்.மகேஸ்வரன், பவானி வடிகால் வட்ட நிலை கண்காணிப்பு பொறியாளர் வெங்கடாச்சலம், செயற்பொறியாளர்கள் அருண், கார்த்திகேயன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## நீலகிரி மாவட்ட விவசாயிகள் இயற்கை உரங்களை கொண்டு விவசாயம் செய்ய வேண்டும் கலெக்டர் சங்கர் வேண்டுகோள்

நீலகிரி மாவட்ட விவ சாயிகள் இயற்கை உரங் கள் மூலம் விவசாயம் செய்ய வேண்டும் என்று கலெக்டர் சங்கர் வேண்டுகோள் விடுத்து உள்ளார்.

நவீன விவசாய சாகுபடி குறித்த பயிற்சி முகாம்

தேசிய தோட்டக்கலை வாரியம், உபாசி நிறுவனம் மற்றும் தோட்டக்கலை துறை சார்பில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள 150 விவசாயிகளுக்கு நவீன விவசாய சாகுபடி குறித்த பயிற்சி முகாம் ஊட்டி யில் நேற்று தொடங்கியது. இந்த முகாமை நீலகிரி மாவட்ட கலெக்டர் சங்கர் தொடங்கி வைத்து பேசியதாவது:–

விவசாயிகள் குறைந்த செல வில் அதிக உற்பத்தி செய்வதற் காக தேசிய தோட்டக்கலை துறை சார்பில் நவீன தொழில் நுட்பம், பழைய விவசாயத்தில் புதிய தொழில் நுட்பம் புகுத்து தல், பசுமை குடில்கள் மூலம் காய்கறி உற்பத்தி செய்தல், இயற்கை வேளாண்மை, எந்தி ரம் மூலம் விவசாய நிலங்களை சமன் செய்தல், நடவு போன்ற தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது.

நிதியுதவி

இந்த பயிற்சிகள் சிறந்த வேளாண்மை அறிவியல் அறி ஞர்கள் மூலம் ஒரு வாரம் நடத் தப்படுகிறது. நீலகிரி மாவட் டத்தில் உள்ள 66 விவசாயி களுக்கு தோட்டக்கலை துறை சார்பில் விவசாய பொருட்கள் வாங்க ரூ.15 லட்சமும், இஞ்சி, மிளகு விவசாயத்தை மேம் படுத்த 233 விவசாயிகளுக்கு மேம்பாட்டு நிதியும், மலர் சாகுபடி செய்ய 26 விவசாயி களுக்கு ரூ.1 கோடியே 53 லட்சம் நிதி உதவி வழங்கப் பட்டு உள்ளது.

ஒருங்கிணைந்த நீர் நிர்வா கம் மூலம் குறைந்த தண்ணீ ரில் விவசாயம் செய்வது குறித்தும், உற்பத்தி செய்த பொருட்களுக்கு மதிப்பு கூட்டல் போன்றவைகள் குறித்தும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இயற்கை உரங்கள்

இயற்கை உரங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் காய்கறி களுக்கு தற்போது நல்ல விலை கிடைத்து வருகிறது. எனவே நீலகிரி மாவட்ட விவசாயிகள் இயற்கை உரங்களை கொண்டு விவசாயம் செய்ய ஆர்வம் காட்ட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

பயிற்சி முகாமில் தோட்டக் கலை இணை இயக்குனர் மணி, உபாசி திட்ட ஒருங் கிணைப்பாளர் டாக்டர் ராம மூர்த்தி, மத்திய உருளைக் கிழங்கு ஆராய்ச்சி மைய

ஆராய்ச்சியாளர் டாக்டர் வெங்கடாசலம், தோட்டக் கலை உதவி இயக்குனர்கள் மீராபாய், உமாராணி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## <u>நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை முல்லைப்பெரியாறு, வைகை அணை நீர்மட்டம் உயர்வு</u>

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக முல்லைப் பெரியாறு மற்றும் வைகை அணைகளின் நீர்மட்டம் சீராக உயர்ந்து வருகிறது.

தொடர் சாரல் மழை

கேரள மாநிலத்தில் கடந்த மாதம் தென்மேற்கு பருவமழை தொடங்கியது. தேனி மாவட் டம் கம்பம் பள்ளத் தாக்கு பாசன பகுதிகளான கம்பம், கூடலூர், உத்தம பாளையம், சண்முகாநதி அணை பகுதி களில் கடந்த வாரம் மழை பெய்தது. ஆனால் மாவட்டத் தின் பிற பகுதிகளில் சொல்லிக் கொள்ளும் படி மழை பெய்ய வில்லை. இதை அடுத்து கடந்த சில நாட்களாக தேனி மாவட் டத்தில் வெயில் கொளுத்தி வந்தது.

நேற்று முன்தினம் முல்லைப் பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையால் அணைக்கு நீர்வரத்து ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வினாடிக்கு 962 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று வினாடிக்கு 1,168 கன அடியாக அதி கரித்தது. நீர்மட்டம் 117.90 அடியாக காணப்பட்டது. அணையில் இருந்து பாசனத் திற்காக வினாடிக்கு 955 கன அடி தண்ணீர் திறந்துவிடப் பட்டுள்ளது. நீர் இருப்பு 2 ஆயிரத்து 249 மில்லியன் கன அடியாக உள்ளது.

29 அடியானது வைகை

போதுமான மழை இன்றி கடந்த சில மாதங்களாக நீர் வரத்து இல்லாமல் காணப் பட்ட வைகை அணைக்கு முல்லைப் பெரியாறு அணை யில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் வந்து கொண்டிருக் கிறது. கடந்த ஒரு வாரமாக ஏற்பட்டுள்ள நீர்வரத்து காரணமாக வைகை அணை நீர்மட்டம் சீராக உயர்ந்து வருகிறது. கடந்த வாரம் 25 அடியாக காணப்பட்ட வைகை அணை நீர்மட்டம் நேற்று காலை 29.23 அடிக்கு உயர்ந்தது. வினாடிக்கு 376 கன அடி தண்ணீர் வரத்து உள்ளது.

மதுரை மற்றும் சேடப்பட்டி கூட்டுக்குடிநீர் திட்டத்திற்காக அணையில் இருந்து வினா டிக்கு 40 கனஅடி தண்ணீர் திறந்து விடப் பட்டுள்ளது. மொத்த நீர் இருப்பு 339 மில்லி யன் கன அடியாக உள்ளது. மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 31.71 அடியாக காணப்பட்டது. நீர்வரத்து இல்லாத நிலையில் அணையில் இருந்து வினாடிக்கு 8 கன அடி தண்ணீர் திறந்து விடப் பட்டுள்ளது. மொத்த நீர் இருப்பு 92.52 மில்லியன் கன அடியாக உள்ளது.

மழையளவு

சோத்துப்பாறை அணை யின் நீர்மட்டம் 63.46 அடியாக காணப்பட்டது. அணையில் இருந்து வினாடிக்கு 3 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. மொத்தம் 24.91 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது. நேற் று முன்தினம் பெய்த மழையளவு (மி.மீட்டரில்) வருமாறு, தேக்கடி-6.4, பெரியாறு-11.2, கூடலூர்-1.5.

**அனுமந்தன்பட்டியில் வளர்ச்சி திட்டப்பணிகள் கலெக்டர் ஆய்வு**

**உத்தமபாளையம்:** தேனி மாவட்டம் உத்தம பாளையம் அடுத்துள்ள அனுமந்தன்பட்டி பேரூ ராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து மாவட்ட கலெக்டர் கே.எஸ்.பழனிசாமி ஆய்வு மேற்கொண்டார். நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.54 லட்சம் மதிப்பில் அமைக்கப் பட்டுள்ள தார் சாலை, பேரூராட்சி பகுதி களில் அமைக்கப் பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு தொட்டி களை பார்வையிட்டார். அப் போது வளர்ச்சி திட்ட பணிகள் தரமானதாக வும், குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்றும் உத்தரவிட் டார். மேலும், பொதுமக்களி டையே மழை நீர் சேகரிப்பு அவசியத்தை வலியுறுத்த வேண்டும். அரசின் நலத்திட்டங்கள் அனைத்து மக்களையும் சென்றடையும் வகையில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறி வுறுத்தினார். ஆய்வின்போது பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் கருப்பையா, பேரூ ராட்சி தலைவர் மலர்செல்வி இளைய நம்பி, செயல் அலு வலர் மோகன்குமார் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

**நீரின்றி கருகி வரும் கரும்பு கடனுதவி கிடைக்குமா?**

**திருக்கழுக்குன்றம்:** வறட்சியில் கரும்பு பயிர் கருகி வருவதால், கிணறு ஆழப்படுத்த அரசு கடனுதவி வழங்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

15 ஆண்டுகளுக்கு முன், காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெல்லுக்கு அடுத்தபடியாக, கரும்பு அதிக அளவில் பயிரிடப்பட்டது. கடந்த பத்து ஆண்டுகளாக, பருவமழை

குறைவு, தண்ணீர் பற்றாக்குறை, விவசாயத்திற்கு ஆட்கள் பற்றாக்குறை, கரும்பை வெட்டி எடுப்பதற்கு ஆட்கள் கிடைக்காமை போன்ற காரணங்களால் கரும்பு உற்பத்தி குறைந்தது.

இந்தாண்டு மாவட்டத்தில், 3,500 ஏக்கர் பரப்பளவில் கரும்பு பயிரிடப்பட்டு உள்ளது. திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் நரப்பாக்கம், ஆனூார், பாண்டூர், பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் 400 ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால், நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து, கிணற்றில் போதிய நீரூற்று இல்லாததால், கரும்புக்கு நீர் பாய்ச்ச முடியாமல் கருகி வருகிறது. வங்கிக்கடன் வாங்கி, பயிர் செய்துள்ள விவசாயிகள் கரும்பு காய்ந்து வருவதால், கடனாளியாக மாறும் நிலை உருவாகியுள்ளது. எனவே, கரும்பு பயிரை காக்க, கிணற்றை ஆழப்படுத்துவதற்காக, வங்கிகள் மூலம் கடனுதவி செய்ய அரசு முன்வர வேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**<u>கரும்பு விவசாயிகளுக்கு கடனுதவி வழங்கும் விழா</u>**

**விக்கிரவாண்டி:** முண்டியம்பாக்கத்தில் கரும்பு விவசாயிகளுக்கு ஸ்டேட் பாங்க் மூலம் கடனுதவி வழங்கும் விழா நடந்தது. முண்டியம்பாக்கம் ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை வளாகத்தில் நடந்த விழாவிற்கு துணை பொது மேலாளர் (விரிவாக்கம் ) லட்சுமணன் தலைமை தாங்கினார். துணை பொது மேலாளர் (கரும்பு ) முன்னிலை வகித்தார். மேலாளர் சிவாஜி கணேசன் வரவேற்றார். விழுப்புரம் ஸ்டேட் பாங்க் மேலாளர் ரவிச்சந்திரன் சர்க்கரை ஆலையை சேர்ந்த கரும்பு விவசாயி களுக்கு உழவு கலப்பை மற்றும் கரும்பு சோகையை தூளாக்கும் இயந்திரம் வாங்க கடனுதவி வழங்கி பேசினார். முண்டியம்பாக்கம் ஆலை விவசாயிகள் , விரிவாக்க அலுவலர்கள் பாஸ்கரன், சரவணன், பாங்க் கள அலுவலர் சக்திவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**<u>வேளாண் விளை பொருட்கள்: ரூ.1.35 கோடி மதிப்பில் ஏலம்</u>**

**அந்தியூர்:** அந்தியூர் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு, நேற்று, அத்தாணி, கோபி, பருவாச்சி, எண்ணமங்கலம், புதுப்பாளையம், சங்கராப்பாளையம், கொளத்தூர், சென்னம்பட்டி பகுதி மற்றும் கர்நாடக மாநில விவசாயிகளும், பருத்தி, தேங்காய், எள், மக்காச்சோளம், நிலக்கடலை ஆகியவற்றை, ஏலத்துக்காக கொண்டு வந்திருந்தனர். பருத்தி பிடி ரகம், 6,000 மூட்டைகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது. குறைந்த பட்ச விலையாக, குவிண்டால், 4,900 முதல் அதிகபட்ச விலையாக, 5,300 ரூபாய் வரையில், ஏலம் கூறப்பட்டது. ஒரு கோடியே, பத்து லட்சம் ரூபாய்க்கு விற்பனை ஆனது. மேலும், 22 ஆயிரம் தேங்காய், ஆறு முதல், 15 ரூபாய் வரையிலான விலையில், 2.20 லட்சம் ரூபாய்க்கும், கொப்பரை தேங்காய், 200 மூட்டைகள், கிலோ ஒன்று, 97.59 முதல் 103.63 ரூபாய் வரையிலும், 10 லட்சம் ரூபாய்க்கும் ஏலம் போனது. வெள்ளை மற்றும் கருப்பு ரக எள், 120 மூட்டைகள், கிலோ ஒன்றுக்கு, வெள்ளை ரகம், 102.89 முதல், 124.26 ரூபாய்க்கும், கருப்பு ரக எள் கிலோ, 72.19 முதல், 94.69 ரூபாய் என, 11 லட்சம் ரூபாய்க்கும், மக்காச்சோளம், 40 மூட்டைகள், கிலோ, 14.14 முதல், 14.65 ரூபாய் வரை என, 56 ஆயிரம் ரூபாய்க்கும் ஏலம் போனது. நிலக்கடலை (காய்ந்தது), 75 மூட்டைகள், கிலோ, 32.10 முதல், 41 ரூபாய் வரை, 1.60 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்று நடந்த மொத்த ஏலத்தில், ஒரு கோடியே, 34 லட்சத்து, 80 ஆயிரம் ரூபாய்க்கு, வேளாண் பொருட்கள் விற்பனை நடந்தது.

இத்தகவலை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் தெரிவித்தார்.